# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு-638107

## நடத்தப்பட்ட நிகழ்வுகள்

**(ஜூன் 2025 முதல் நவம்பர் 2025 வரை)**

| வ. எண் | தேதி | நிகழ்வு | சிறப்பு விருந்தினர் | தலைப்பு | வலை ஒளி இணைப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 15.09.2025 | திறன் மேம்பாட்டுத் திட்டம் | திரு. ஏ.ஏ. அன்பரசு<br>பணி வாய்ப்பு வழிகாட்டல் ஆலோசகர்,<br>கோபி,<br>திரு. ஆர். அசோக்குமார்<br>தொழில் ஆலோசகர்,<br>LMES அகாடமியின்,<br>சென்னை | செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சிகளும் வாய்ப்புகள்களும் | ---- |
| 2. | 12.09.2025 | கல்லூரிகளுக்கு இடையேயான தகவல் தொழில்நுட்ப விழா | திரு.சங்கர்ராஜ் சுப்ரமணியன்,<br>நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி<br>ப்ராம்ட் இன்ஃபோடெக்,<br>கோவை. | தகவல் தொழில்நுட்ப விழா | --- |
| 3. | 01.09.2025 முதல் 06.09.2025 வரை | ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் ( இணையவழி- ஆறு நாட்கள்) | 13 சிறப்பு விருந்தினர்கள் | செயற்கை நுண்ணறிவின் வாயிலாகத் தொழில்துறை (6.0)யை உருவாக்குதலும் வடிவமைத்தலும் | https://www.youtube.com/watch?v=q_v4By51P8Y<br><br>ATAL sponsored FDP on Generative AI in Shaping industry 6.0 |

| வ. எண் | தேதி | நிகழ்வு | சிறப்பு விருந்தினர் | தலைப்பு | வலை ஒளி இணைப்பு |
|---|---|---|---|---|---|
| 4 | 25.08.2025 முதல் 30.08.2025 வரை | ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் | 08 சிறப்பு விருந்தினர்கள் | வேளாண் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் விவசாயத் தீர்வுகளில் செயற்கை நுண்ணறிவு உட்பொதிக்கப்பட்ட துல்லியமான வேளாண்மை | --- |
| 5 | 20.08.2025 முதல் 22.08.2025 வரை | பணித் திறன் மேம்பாட்டுத் திட்டம் | டாக்டர் எல்.ஜே. சார்லஸ், நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி , சாலா மைண்ட்வேர்ஸ், இயக்குநர், திறன் தொழிற்சாலை, மற்றும் நிறுவனர் மைண்ட்வேர்ஸ் பத்திரிகை | மாணவர்களை மேம்படுத்துவதற்கான பயணத்தில் கல்வியாளர்களை மேம்படுத்துதல் | --- |
| 6 | 11.08.2025 | சிறப்புச் சொற்பொழிவு | திரு. பத்மானந்த் வசந்தசேகரன், தலைமை இயக்க அதிகாரி பெபுல் டெக் மற்றும் வொர்க்ஃபாஸ்ட் .ஏஐ சென்னை | செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்களில் அதன் தாக்கம் | --- |
| 7 | 08.08.2025 முதல் 10.08.2025 வரை | பயிற்சிப் பட்டறை | திரு. S.செந்தில்குமார், இயக்குநர், பாரதப் பண்பாட்டுக் கல்வி மற்றும் பயிற்சி மையம், தமிழ்நாடு | இளைஞர் மேம்பாட்டுப் பயிற்சி முகாம் | --- |

| வ. எண் | தேதி | நிகழ்வு | சிறப்பு விருந்தினர் | தலைப்பு | வலை ஒளி இணைப்பு |
|---|---|---|---|---|---|
| 8 | 06.08.2025 | சிறப்புச் சொற்பொழிவு | பாவலர் .அறிவுமதி கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர், சென்னை. | நட்புக் காலம் | --- |
| 9 | 23.07.2025 | தமிழ் மன்றத் தொடக்க விழா | முனைவர் ஆ.குமரவேள், துறைத்தலைவர், கால்நடை உடற்கூறியல், அரசு கால்நடை மருத்துவக்கல்லூரி, நாமக்கல் | மெல்லத் தமிழ் இனி வாழும் | --- |
| 10 | 21.07.2025 முதல் 29.07.2025 வரை | இணையவழி ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் | 07 சிறப்பு விருந்தினர்கள் | ஆங்கில மொழி இலக்கியத்தில் புதுமையான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி எல்லைகள்: முழுமையான வகுப்பறை சிறக்க கல்வியாளர்களை மேம்படுத்துதல் | --- |
| 11 | 21.07.2025 முதல் 29.07.2025 வரை | இணையவழி ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் | 07 சிறப்பு விருந்தினர்கள் | வணிகக் கல்வியில் புதுமையான கற்பித்தல் முறைகள் மற்றும் டிஜிட்டல் ஒருங்கிணைப்பு: எதிர்காலத் தேவைக்கேற்ற பட்டதாரிகளை உருவாக்குதல் | --- |
| 12 | 27.06.2025 முதல் 05.07.2025 வரை | வழிகாட்டுதல் பயிற்சி வகுப்பு | --- | --- | --- |

| வ. எண் | தேதி | நிகழ்வு | சிறப்பு விருந்தினர் | தலைப்பு | வலை ஒளி இணைப்பு |
| --- | --- | --- | --- | --- | --- |
| 13 | 27.06.2025 | முதலாமாண்டு பட்ட வகுப்புகள் தொடக்க விழா | சுவாமி யோகாமிருதானந்தர், ராமகிருஷ்ணமிஷன் வித்யாலயா, கோவை<br><br>கலை மாமணி மரபின் மைந்தன் முத்தையா, படைப்பாளர், தன்னம்பிக்கைப் பேச்சாளர், கோவை | --- | https://www.youtube.com/watch?v=d1dOBmhzFa4<br><br>https://www.youtube.com/watch?v=Glo0I4geUFU |
| 14 | 25.06.2025 | ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் | திரு. கதிர், மனிதவளப் பயிற்சியாளர் மற்றும் எழுத்தாளர், நிறுவனர் , சிக்ஸ் பிளஸ் ஒன் பயிற்சி அகாடமி, ஈரோடு | திறமையான வழிகாட்டுதல் | --- |
| 15 | 18.06.2025 முதல் 20.06.2025 வரை | திறன் மேம்பாட்டுத் திட்டம் | திரு. கதிர், மனிதவளப் பயிற்சியாளர் மற்றும் எழுத்தாளர், நிறுவனர் , சிக்ஸ் பிளஸ் ஒன் பயிற்சி அகாடமி, ஈரோடு | ஆசைப்படுங்கள் அடைந்து விடுங்கள் | --- |

**முதல்வர்**

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## கணினிப் பயன்பாட்டியல் துறை (முதுகலை)

### திறன் மேம்பாட்டுத் திட்டம்

### ‘செயற்கை நுண்ணறிவின் (AI) வளர்ச்சிகளும் வாய்ப்புகளும்”

### (Skill Development Programme – Growth and Opportunities in AI”)




ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரி முதுகலை கணினி அறிவியல்(M.Sc CS), முதுகலை கணினி பயன்பாட்டியல்(MCA), முதுகலை கணிதம்(M.Sc Mathamatics) மற்றும் முதுகலை இயற்பியல்(M.Sc. Physics) ஆகிய துறைகளைச் சார்ந்த மாணவர்களுக்காக, முதுகலை கணினிப் பயன்பாட்டியல் துறை சார்பாக செப்டம்பர் 15, 2025 அன்று "செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சிகளும் வாய்ப்புகள்களும்" என்ற தலைப்பில் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை ஏற்பாடு செய்தது.

அன்றைய முற்பகல் அமர்வில், கோபியைச் சேர்ந்த தொழில் வழிகாட்டி ஆலோசகர் திரு. ஏ.ஏ. அன்பரசு அவர்கள், செயலி உருவாக்கத்தில் பயன்படுத்தப்படும் செயற்கை நுண்ணறிவு கருவிகள் குறித்து உரையாற்றினார். அவரது உரை “நிகழ்காலச் சூழ்நிலைகளில் செயற்கை நுண்ணறிவு கருவிகளும் தொழில்நுட்பங்களும் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன” என்பதை விளக்குவதாக இருந்தது.

மேலும், உயர் கல்வியைத் தொடர விருப்பமுள்ளவர்களுக்கு பல்வேறு நுழைவுத் தேர்வுகள் குறித்து விவாதித்ததுடன், UPSC, GATE மற்றும் வங்கித் தேர்வுகள் உட்பட அரசு வேலை வாய்ப்புகளுக்குத் தயாராவது குறித்த வழிகாட்டுதல்களையும் வழங்கினார். மேற்கண்ட அமர்வு, மாணவர்கள் தங்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்புப் பாதைகளைத் திறம்படத் திட்டமிடவும் ஊக்கமளித்தது.

தொடர்ந்து நடந்த பிற்பகல் அமர்வில், சென்னையைச் சேர்ந்த LMES அகாடமியின் தொழில் ஆலோசகர் திரு. ஆர். அசோக்குமார் அவர்கள், செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகள், அரசுத் துறைகள் மற்றும் தகவல் தொழில் நுட்பநிறுவனங்களில் உள்ள வேலைவாய்ப்புகள், அத்துடன் தொழில் முனைவோருக்கான வாய்ப்புகள் ஆகியவை குறித்த ஒரு விரிவான உரையை வழங்கினார். அத்துடன் மாணவர்களின் தொடர்புத் திறன்களையும் தொழில்நுட்பத் திறன்களையும் மேம்படுத்துவதற்காக பல்வேறு புத்தகங்களையும், செயலிகளையும் அவர் பரிந்துரைத்தார். மேலும் வெற்றிகரமான தொழில் முனைவோருக்காத் தங்களைத் தாங்களே மேம்படுத்திக் கொள்ளுமாறு மாணவர்களை அவர் வலியுறுத்தினார்.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## கணினி அறிவியல் துறை (இளநிலை)

### தகவல் தொழில் நுட்பவிழா
### (Intercollegiate Meet - DIGI FEST 2025)




கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் இளநிலை கணினி அறிவியல் மற்றும் தரவு பகுப்பாய்வுத் துறையின் சார்பில் DIGI FEST 2025 எனும் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான தகவல் தொழில் நுட்ப விழா 12.09.2025 அன்று கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. இவ்விழாவி இளநிலை கணினி அறிவியல் துறையின் தலைவர் திரு.பி.ரமேஷ் அவர்கள் வரவேற்புரையாற்றினார். கல்லூரியின் தாளாளர் உயர்திரு. பி.சச்சிதானந்தன் அவர்கள் தலைமை வகித்தார். கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹெச்.வாசுதேவன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட கோவையைச் சேர்ந்த உடனடித் தகவல் தொழில் நுட்பத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு.சங்கர்ராஜ் சுப்ரமணியன் சைபர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு உரையை நிகழ்த்தினார்.

இன்றைய சமூக ஊடகங்களை, எத்தகைய முறையில் பெண்கள் பாதுகாப்பாக கையாள வேண்டும் மின்னஞ்சல், புலனம், இன்ஸ்டாகிராமில் வருகின்ற தகவல்கள் உண்மையா? என்பதை எப்படி கண்டறிய வேண்டும் இணையவழி, மின்னணு மற்றும் செயலிகள் மூலம் பணபரிவர்த்தனை செய்யும் போது நாம் கவனத்தில் கொள்ள வேண்டிவைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

இவ்விழாவின் தொடர்ச்சியாக பல்வேறு மாவட்டங்களில் உள்ள 50க்கும் மேற்பட்ட கல்லூரிகளிலிருந்து 600 மாணவர்கள் வருகைபுரிந்தனர். அவர்கள் ஆய்வுக் கட்டுரைகள் வாசித்தல், வினாடிவினா, பிழைதிருத்தம், வலை வடிவமைப்பு, சந்தைப்படுத்துதல், குழுநடனம், சைகை நாடகம் என அனைத்துப் போட்டிகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பெருந்துறை ‘தி கொங்கு வேளாளர் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி’ டிரஸ்ட்டின்ப் துணைத் தலைவர் உயர்திரு. ஏ.வெங்கடாசலம் அவர்கள் பரிசுகளை வழங்கினார். இதில் ஈரோட்டைச் சேர்ந்த வேளாளர் மகளிர் கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள் முதல் பரிசுக்கான வெற்றிக் கோப்பையினை வென்றனர். இவ்விழாவின் இறுதியாக இளநிலை கணினி அறிவியல் துறையின் உதவிப் பேராசிரியரும் விழா ஒருங்கிணைப்பாளருமான திருமதி. எம்.எஸ்.கோகிலா நன்றியுரையாற்றினார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை இளநிலை கணினி அறிவியல் துறை மற்றும் தரவு பகுப்பாய்வுத் துறையின் பேராசிரியர்களும் மாணவர்களும் செய்திருந்தனர்.










ஈரோடு கொங்கு கல்லூரியில்

## தகவல் தொழில்நுட்ப விழா

ஈரோடு, செப்.13-

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் இளநிலை கணினி அறிவியல் மற்றும் தரவு பகுப்பாய்வு துறை சார்பில் மாநில அளவிலான தகவல் தொழில்நுட்ப விழா நடைபெற்றது. கல்லூரி தாளாளர் பி.சச்சிதானந்தம் விழாவுக்கு தலைமை தாங்கினார். முதல்வர் எச்.வாசுதேவன் வாழ்த்தி பேசினார். கோவை உடனடி தகவல் தொழில்நுட்ப நிறுவனர் சங்கர்ராஜ் சுப்பிரமணியம் சைபர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசினார். அதைத்தொடர்ந்து ஆய்வு கட்டுரைகளை வாசித்தனர். தொடர்ந்து வினாடி வினா உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இந்த போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பெருந்துறை கொங்கு வேளாளர் இன்ஸ்டிட்யூட் ஆப் டெக்னாலஜி டிரஸ்டு துணை தலைவர் வெங்கடாலசம் பரிசு வழங்கினார். கணினி அறிவியல் துறை தலைவர் ரமேஷ் வரவேற்றார். முடிவில் இளநிலை கணினி அறிவியல் துறை உதவி பேராசிரியர் எம்.எஸ்.கோகிலா நன்றி கூறினார்.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி

## (தன்னாட்சி)

## ஈரோடு– 638107

# கணினிப் பயன்பாட்டுத் துறை

## ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி (இணையவழி)

## செயற்கை நுண்ணறிவின் வாயிலாகத் தொழில்துறை(6.0)யை உருவாக்குதலும் வடிவமைத்தலும்

## (ATAL – 6 Day Online FDP – "Generative AI in shaping Industry 6.0" )




ஈரோடு, கொங்கு கலை அறிவியல் தன்னாட்சிக் கல்லூரியில் இளநிலை கணினிப் பயன்பாட்டுத் துறை சார்பாக, அகில இந்திய தொழில் நுட்பக் கல்விக் கவுன்சிலின் (ஏஐசிடிஇ) பயிற்சி மற்றும் கற்றல் (ஏ.டி.ஏ.எல்.) அகாடமியின் நிதி உதவியோடு, "செயற்கை நுண்ணறிவின வாயிலாகத் தொழில்துறை (6.0)யை உருவாக்குதலும் வடிவமைத்தலும்" என்ற பொருண்மையில உயர்கல்வி ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சி, 01.09.2025 திங்கட்கிழமை அன்று தொடங்கி 06.09.2025 சனிக்கிழமை வரை மாலை 06.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை, 6 நாட்கள் "ஜூம் மீட்"(Zoom Meet) இணையவழியிலும் மற்றும் "யூ டியூப்"(You Tube live) நேரலையாகவும நடைபெற்றது.

முதல் நாள் தொடக்கவிழாவில், கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் தாளாளர் திரு.பி.சச்சிதானந்தன் ஐயா அவர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இப்பயிற்சி தொடங்கியது. கல்லூரி முதல்வர் முனைவர் ஹெச்.வாசுதேவன் ஐயா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். கணிணிப்பயன்பாட்டுத் துறைத் தலைவரும் இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளருமான முனைவர் தி.ஆ.சங்கீதா அவர்கள் இணையவழியில் இணைந்துள்ள அனைவரையும் வரவேற்றார். கோயம்புத்தூர் டாடா கன்சல்டன்சி சர்வீஸ்(டி.சி.எஸ்) ஐ.டி. துறையின் ஆய்வாளர் திருமதி.அபிநயா கமலக்கண்ணன் அவர்கள் அறிமுகவுரையாற்றினார். கணினிப் பயன்பாட்டுத் துறை உதவிப் பேராசிரியரும் இந்நிகழ்வின் இணை ஒருங்கிணைப்பாளருமான திரு.கு.ஈஸ்வரமூர்த்தி அவர்கள் நன்றியுரை நல்கினார். தொடர்ந்து ஆறு நாட்களும் நடந்த 13 அமர்வுகளிலஇ முதல் 10 அமர்வுகள் மாலை 06.00 மணி முதல் 09.00 மணி வரையும், அடுத்த 3 அமர்வுகளும் நிறைவு நாள் 06.09.2025 சனிக்கிழமை அன்று பிற்பகல் 02.00 மணி முதல் மாலை 06.30 மணி வரை நடைபெற்றன.

ஒவ்வொரு அமர்விலும் அமெரிக்கா மற்றும் இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலிருந்தும் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பம், கற்பித்தல் போன்ற துறைகளில் அனுபவமிக்க வல்லுநர்கள், பன்னாட்டு நிறுவனங்களில் பணியாற்றக்கூடிய ஆய்வாளர்கள், கட்டமைப்புக் கலைஞர்கள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் பணியாற்றும் முதல்வர், பேராசிரியர்கள் ஆகியோர்கள் பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளித்தனர். ஒவ்வொரு அமர்விலும் பன்னாட்டு அளவில், தேசிய அளவில் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு மாவட்டங்ளிலும் உள்ள கல்லூரிகளில் பணியாற்றும் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட 350க்கும் மேற்பட்டோர் பயிற்சியாளர்களாகப் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

மேலும், ஆறு நாட்கள் இணையவழியில் நடைபெற்ற ஆசிரியர் திறன் மேம்பாட்டுப் பயிற்சியின் நிறைவு விழா 06.09.2025 சனிக்கிழமை இரவு 06.00 மணியளவில் தொடங்கியது. கணிணிப்பயன்பாட்டுத் துறை உதவிப் பேராசிரியர் திருமதி.சு.ஹேமலதா அவர்கள் இணைய வழியில் இணைந்துள்ள அனைவரையும் வரவேற்றார். கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் தாளாளர் திரு.பி.சச்சிதானந்தன் ஐயா அவர்கள்

தலைமையேற்றார். கல்லூரியின் முதல்வர் முனைவர் ஹெச்.வாசுதேவன் ஐயா அவர்கள், பயிற்சி தொடர்ந்து நல்ல முறையில் நடைபெற்றதற்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். தொடர்ந்து சென்னை, விநாயகா மிஷன் ஆராய்ச்சி அறக்கட்டளை மற்றும் அறுபடை வீடு தொழில் நுட்ப நிறுவனம் (ஏவிஐடி) கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறைத் தலைவரும் பேராசிரியருமான முனைவர் எஸ்.பாலகிருஷ்ணன் அவர்கள் நிறைவு விழாவின் பேருரையாற்றினார். அதைத் தொடர்ந்து, பயிற்சி தொடர்பான பின்னுட்டப் பகுதியில் பங்கேற்பாளர்கள் தங்களுடைய கருத்துக்களைப் பதிவு செய்தனர். நிறைவாகக் கணினிப் பயன்பாட்டுத் துறைத் தலைவரும் இந்நிகழ்வின் ஒருங்கிணைப்பாளருமான முனைவர் தி.ஆ.சங்கீதா அவர்கள் நன்றியுரையாற்றினார்.


01.09.2025 முதல் 06.09.2025 வரை நடைபெற்ற அமர்வுகளில் பங்கேற்ற பங்கேற்பாளர்களுக்கு, அந்தந்த அமர்வுகளில் நடைபெற்ற பயிற்றுரை தொடர்பாக பயிற்சியின் நிறைவு நாளில் மாலை 06.30 மணி முதல் இரவு 07.45 மணி வரை இணையவழித் தேர்வு நடைபெற்றது. ஒவ்வொரு அமர்வுகளின் தொகுப்புப் பணிகளையும் நேரலையில் பகிர்தலையும் மற்றும் பிறபணிகளையும் கணினிப் பயன்பாட்டுத் துறைப் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.












# Kongu Arts & Science College Hosts FDP on Generative AI for Industry 6.0

ERODE



The Department of Computer Applications at Kongu Arts and Science College (Autonomous), Erode, successfully organized a six-day online Faculty Development Program (FDP) from 01.09.2025 to 06.09.2025 with financial support from AICTE's Training and Learning (ATAL) Academy. The program was themed "Generative AI in Shaping Industry 6.0" was conducted through Zoom Meet and live-streamed on YouTube from 6:00 PM to 9:00 PM daily, with additional sessions on the final day from 2:00 PM to 6:30 PM. The inaugural session was graced by dignitaries including Mr. P. Sachithanandan (Correspondent), Dr. H. Vasudevan (Principal), Dr. T.A. Sangeetha (Coordinator) and Mr. Eswaramoorthi (Co coordinator).

The FDP included 13 expert-led sessions focusing on Artificial Intelligence, Technology, and Pedagogy, delivered by professionals from the USA, United Kingdom , various Indian states, and Tamil Nadu. Speakers included researchers from MNCs, university professors, college principals, and technical educators. The program witnessed enthusiastic participation from over 350 faculty members nationwide and internationally, including HoDs, Professors, Assistant Professors, and Lecturers.

On the final day, an online examination based on the sessions was held, followed by a feedback session. The Valedictory Ceremony was conducted on 06.09.2025 at 7:45PM, featuring speeches by Mr. P. Sachithanandan, (Correspondent), Dr.H.Vasudevan, (Principal) and Dr. S. Balakrishnan Professor & Head, Department of Computer Science and Engineering, AVIT, Vinayaka Mission's Research Foundation, Chennai. The event concluded with a vote of thanks by Dr. T.A. Sangeetha, (Coordinator) and Head , Department of Computer Applications. The FDP was efficiently coordinated and supported by the faculty members of the Department of Computer Applications, ensuring smooth conduct, streaming, and documentation of sessions.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
## ஈரோடு– 638107


## வணிக நிர்வாகத் துறை (கணினி பயன்பாடுகள்)

## ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம்

## வேளாண் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் வேளாண்மைத் தீர்வுகளில் செயற்கை நுண்ணறிவு (AI) இணைக்கப்பட்ட துல்லிய வேளாண்மை

**(Faculty Development Programme - AI-Embedded Precision Farming in Agritech and Digital Farming Solutions)**





கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி), வணிக நிர்வாகத் துறை (கணினி பயன்பாடுகள்) சார்பாக AICTE-ஆல் நிதியுதவியுடன், "வேளாண் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் விவசாயத் தீர்வுகளில் செயற்கை நுண்ணறிவு உட்பொதிக்கப்பட்ட துல்லியமான வேளாண்மை" என்ற தலைப்பில் 6 நாள் நேரடி ஆசிரியர் மேம்பாட்டு திட்டம் (FDP) 25.08.2025 முதல் 30.08.2025 வரை நடத்தப்பட்டது. இதில் சுமார் 50 பங்கேற்பாளர்கள் பங்கேற்றனர். நவீன விவசாய நடைமுறைகளில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதில் ஆசிரிய உறுப்பினர்களின் அறிவு மற்றும் ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்துவதை ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகக் கொண்டு நடதப்பட்டது. இந்த ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தில் திரு. எல். குழந்தைவேலு, திரு. ஆர்.எம். சுப்பிரமணியன், திரு. பி.கே. தெய்வசிகாமணி, திரு. பி.எஸ். கண்ணன், முனைவர் எஸ். பாஸ்கரன், டாக்டர் எஸ். பாலமுருகன், முனைவர் வி. அபிராமி, முனைவர் டி. வெங்கடேசன், முனைவர் பி. திருமூர்த்தி மற்றும் முனைவர் விஸ்வநாதன் உள்ளிட்ட புகழ்பெற்ற வல்லுனர்கள் இந்த ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டஅமர்வுகளில் பயிற்றுநர்களாக கலந்து கொண்டு பயிற்றுவித்தனார்.

இந்த ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தின் தொடக்க விழா 25.08.2025 அன்று காலை 09:00 மணிக்கு கல்லூரியின் வெள்ளி விழா அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் தலைமை விருந்தினர்களாக தாளாளர் உயர்திரு பி.டி. தங்கவேல் அவர்கள் திரு. ஏ.கே. இளங்கோ, கொங்கு பொறியியல் கல்லூரியின் தாளாளர் அவர்கள் மற்றும் முதல்வர் முனைவர் எச். வாசுதேவன் அவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். தாளாளர் திரு. பி.டி. தங்கவேல் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார், அதைத் தொடர்ந்து முதல்வர் முனைவர் எச். வாசுதேவன் அவர்கள் தலைமை உரையாற்றினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் ஆர். விஜய பிரியா வரவேற்புரை வழங்கினார். மேலும், ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் ஆகியோரும் பங்கேற்பாளர்களுடன் உடனிருந்தனர்.









**Business Minutes**
August 19 | 2025 | Tuesday

## KASC to Host 6-Day FDP on AI-Embedded Precision Farming

ERODE

Kongu Arts and Science College (Autonomous), Erode, will organise a six-day Faculty Development Programme (FDP) on "AI-Embedded Precision Farming in AgriTech and Digital Farming Solutions" from August 25th to 30th. The programme, organised by the Department of Management, has received funding support of ₹3.5 lakh from the All India Council for Technical Education (AICTE) Training and Learning (ATAL) Academy. Faculty members and research scholars from higher education institutions across Tamil Nadu and other States are expected to participate. Eminent trainers, including experts from reputed companies and universities will handle the sessions.

The official AICTE order sanctioning the grant was handed over bythe Correspondent Thiru. P.D. Thangaveland the Principal Dr.H. Vasudevan. The event is being coordinated by Dr.R. Vijayapriya, Director M.B.A, Associate Professor and Head, Department of Business Administration (Computer Applications), along with the department faculties. The Correspondent addressed that only a selected number of higher education institutions across Tamil Nadu had received AICTE's support for such FDPs and added that it was a matter of pride that KASC was among them.


# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## உள்தர உறுதிக் கட்டமைப்பு(IQAC)

## பணித் திறன் மேம்பாட்டுத் திட்டம்

## " மாணவர்களை மேம்படுத்துவதற்கான பயணத்தில் கல்வியாளர்களை மேம்படுத்துதல் "

**(Professional Development Programme - “Empowering Educators : For a Journey towards Empowering Students”)**




கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி) உள் தர உறுதிக்கட்டமைப்பு (IQAC) 20/08/2025 முதல் 22/08/2025 வரை “மாணவர்களை மேம்படுத்துவதற்கான பயணத்தில் கல்வியாளர்களை மேம்படுத்துதல்” என்ற தலைப்பில் மூன்று நாள் பணித் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை (PDP) ஏற்பாடு செய்தது.

முதல் நாள் நிகழ்ச்சியில், "உள் வலிமை மற்றும் தனிப்பட்ட சீரமைப்பை வளர்ப்பது" என்ற கருப்பொருளில், திறன் தொழிற்சாலையின் இயக்குநர், சாலா மைண்ட்வேர்ஸின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியும், மைண்ட்வேர்ஸ் பத்திரிகையின் நிறுவனர் மற்றும் தலைமை ஆசிரியருமான முனைவர எல்.ஜே.சார்லஸ் அவர்கள் சுய விழிப்புணர்வு, உணர்ச்சி நுண்ணறிவு மற்றும் தொழில்முறை இலக்குகளுடன் தனிப்பட்ட மதிப்புகளைச் சீரமைப்பது குறித்து உரையாற்றினார். பங்கேற்பாளர்கள் தங்கள் உள் உந்துதல்களைப் புரிந்துகொள்ளவும், கல்வியாளர்களாக அவர்களின் நோக்க உணர்வை வலுப்படுத்தவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட பிரதிபலிப்பு பயிற்சிகளில் அவர் ஈடுபட்டார்.

இரண்டாவது நாளில், "தனிப்பட்ட தேர்ச்சியை உருவாக்குதல்" என்ற தலைப்பில் தனது சொற்பொழிவை மையமாகக் கொண்டு, ஆசிரிய உறுப்பினர்கள் இலக்கு நிர்ணயம், நேர மேலாண்மை, பழக்க வழக்கங்களை

உருவாக்குதல் மற்றும் மனநிறைவு நடைமுறைகள் மூலம் தங்கள் தனிப்பட்ட வளர்ச்சியின் உரிமையை எடுத்துக்கொள்ள ஊக்குவித்தார். நிகழ்ச்சியின் இறுதி நாளில், "தொழில்முறை தாக்கத்தை உருவாக்குதல்" என்ற கருப்பொருளில், கல்வியாளர்களில் பயனுள்ள கற்பித்தல், வழிகாட்டுதல் மற்றும் தலைமைத்துவம் மூலம் தனிப்பட்ட வளர்ச்சியின் வெளிப்பாட்டை அவர் வலியுறுத்தினார்.

மூன்று நாட்கள் முழுவதும் நடைபெற்ற இந்த, அமர்வுகள் அனைத்தும் ஈடுபாட்டுடன் கூடிய செயல்பாடுகள், மதிப்பீட்டுச் சோதனைகள் மற்றும் குழு கலந்துரையாடல்கள் மூலம் பங்கேற்பாளர்களுக்கு உயிரோட்டமான கற்றல் சூழலை உருவாக்கியது.

‘NAAC தொடர்பான உள்ளடக்கம்’ முனைவர் எல்.ஜே. சார்லஸால் புத்தகமாக எழுதப்பட்டது, இது கொங்கு பொறியியல் கல்லூரி மற்றும் கொங்கு கட்டிடக்கலை பள்ளியின் தாளாளர் திரு.ஏ.கே.இளங்கோ அவர்களால் வெளியிடப்பட்டது மற்றும் கல்லூரியின் முனைவர் எச்.வாசுதேவன் அவர்களால் பெறப்பட்டது.

கல்லூரியின் தாளாளர் திரு.பி.டி.தங்கவேல் அவர்கள், ஆசிரிய உறுப்பினர்களின் தொழில் முறைத் திறனை மேம்படுத்துவதற்கும், அவர்கள் தாக்கத்தை ஏற்படுத்தும் கல்வியாளர்களாக பிரகாசிக்க உதவுவதற்கும் இது போன்ற ஒரு வளமான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஏற்பாட்டுக் குழுவின் முயற்சிகளைப் பாராட்டினார்.






# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## கணினி அறிவியல் துறை (இளநிலை)

### சிறப்புச் சொற்பொழிவு

### செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்களில் அதன் தாக்கம்

**(Guest Lecture on "Artificial Intelligence and its impact on Industries")**




கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் இளநிலை கணினி அறிவியல் துறை சார்பாக 11.08.2025 அன்று பி.எஸ்சி. (கணினி அறிவியல்) மற்றும் பி.எஸ்சி. (தரவு பகுப்பாய்வுடன் கூடிய கணினி அறிவியல்), (B.Sc CS, B.Sc CS with DA) இறுதி ஆண்டு மாணவர்களுக்காக "செயற்கை நுண்ணறிவு மற்றும் தொழில்களில் அதன் தாக்கம்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு ஏற்பாடு செய்யப்பட்டது, இந்த அமர்வை சென்னையின் பெபுல் டெக் மற்றும் வொர்க்ஃபாஸ்ட்.ஏஐ (Pepul Tech and Workfast.ai)இன் தலைமை இயக்க அதிகாரி திரு. பத்மானந்த் வசந்தசேகரன் அவர்கள் வழங்கினார். செயற்கை நுண்ணறிவு, அதன் அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் சுகாதாரம், நிதி, உற்பத்தி மற்றும் பல்வேறு பிற தொழில்கள் போன்ற முக்கிய களங்களில் அதன் விரிவடையும் பங்கு பற்றிய விரிவான புரிதலை மாணவர்களுக்கு வழங்குவதே இந்த விரிவுரையின் நோக்கமாகும். வளர்ந்து வரும் தொழில் பாதைகள், தற்போதைய தொழில்துறையின் போக்குகள் மற்றும் செயற்கை நுண்ணறிவினால் வடிவமைக்கப்பட்ட எதிர்காலத்தில் திறம்பட செயல்படத் தேவையான முக்கியமான திறன் தொகுப்புகளை மாணவர்கள் ஆராய முடிந்தது. மொத்தம் 151 மாணவர்கள் பங்கேற்றனர்.

வினா விடை அமர்வின் மூலம் சிறப்பு விருந்தினர் மாணவர்களுடன் உரையாடி அவர்களின் சந்தேகங்களைத் தெளிவுபடுத்தினார், மேலும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பங்களை ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் ஆராய ஊக்குவித்தார். இந்த அமர்வு அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் செயற்கை நுண்ணறிவைப் பற்றி பல தகவல்களைத் தெரிந்து கொள்ள உதவியாக இருந்தது.






# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## தமிழ்த்துறை

## பண்பாட்டு அறமன்றம்

### இளைஞர் மேம்பாட்டுப் பயிற்சி முகாம்


கொங்கு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
பண்பாட்டு அற மன்றம்
மற்றும்
பாரதப் பண்பாட்டுக்கல்வி மற்றும்
பயிற்சி மையம், தமிழ்நாடு
இணைந்து நடத்தும்
இளைஞர் மேம்பாட்டுப் பயிற்சி
முகாம் அழைப்பிதழ்
நாள் : 8, 9 & 10 ஆகஸ்ட் 2025
பண்பாட்டு அற மன்றம்
கொங்கு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
நஞ்சனாபுரம், ஈரோடு - 638 107.
தொலைபேசி : 0424 - 2339933, 98427 26267

ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரி பண்பாட்டு அறமன்றத்தின் இளைஞர் மேம்பட்டுப் பயிற்சி முகாம் கல்லூரியின் தாளாளர் உயர்திரு. P.D.தங்கவேல் அவர்களின் வழிகாட்டுதலில் 08.08.2025 முதல் 10.08.2025 வரை மூன்று நாட்கள் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. 08.08.2025 அன்று நடைபெற்ற முகாமின் தொடக்க விழாவில் பெருந்துறை 'தி கொங்கு வேளாளர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி' டிரஸ்டின் துணைத் தலைவர் திரு. E.R.K.கிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் 150 க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டு யோகா , சூரிய நமஸ்காரம் மற்றும் விவேகானந்தரின் நீதிபோதனைகள் குறித்த சிந்தனைகளை அறிந்துகொண்டனர். கல்லூரியின் முதல்வர் முனைவர். எச்.வாசுதேவன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ்நாடு பாரதப் பண்பாட்டு கல்வி மற்றும் பயிற்சி மையத்தின் இயக்குனர் திரு எஸ்.செந்தில்குமார் அவர்கள் முகாம் மைய உரை வழங்கிச் சிறப்பித்தார். இந்நிகழ்விற்குப் பண்பாட்டு அறமன்ற ஒருங்கிணைப்பாளரும் தமிழ்த்துறைத் தலைவருமான முனைவர் பி.தினகரன் வரவேற்புரையாற்றினார். பண்பாட்டு அறமன்றப் பொறுப்பாளர் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் எம்.உமாதேவி நன்றியுரை வழங்கினார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைப் பண்பாட்டு அறமன்ற உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



கொங்கு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
நஞ்சனாபுரம், ஈரோடு - 638 107.
பண்பாட்டு அறமன்றம்
மற்றும்
பாரதப் பண்பாட்டுக்கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் தமிழ்நாடு
TÜV SÜD

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## தமிழ்த்துறை

### சிறப்புச் சொற்பொழிவு




ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரி, தமிழ்த் துறையின் நொய்யல் தமிழ் மன்றம் சார்பாக சிறப்புச் சொற்பொழிவு கல்லூரியின் தாளாளர் உயர்திரு. பி.டி.தங்கவேல் அவர்களின் வழிகாட்டுதலில் 06.08.2025 புதன்கிழமை அன்று நடைபெற்றது. இவ்விழாவில் கொங்கு பொறியியல் கல்லூரியின் தாளாளர் உயர்திரு. ஏ.கே..இளங்கோ அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் எச்.வாசுதேவன் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராகக் கவிஞரும், திரைப்படப் பாடலாசிரியருமான பாவலர் அறிவுமதி அவர்கள் கலந்து கொண்டு 'நட்புக்காலம்' எனும் தலைப்பில் தாய் தந்தையரே சிறந்த நண்பர்கள் என்றும், கண்ணியம் காத்தலே நட்பு, அதில் ஆண், பெண் என்ற பேதமில்லை என்று பேசியதோடு சூழ்நிலையைக் கவிதையாக்கும் உத்தியை அவரது கவிதைகள் வாயிலாக எடுத்துரைத்தார். நொய்யல் தமிழ் மன்றத்தின் மாணவப் பொறுப்பாளர்கள் உட்பட சுமார் 400 மாணவர்கள் கலந்துகொண்டனர்.









மாலைமலர்

ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில்

## நொய்யல் தமிழ்மன்ற சிறப்புச் சொற்பொழிவு

ஈரோடு, ஆக. 8—

ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறையின் நொய்யல் தமிழ் மன்றம் சார்பாக சிறப்புச் சொற்பொழிவு கல்லூரியின் தாளாளர் தங்கவேல் வழிகாட்டுதலில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கொங்கு பொறியியல் கல்லூரி தாளாளர் இளங்கோ வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி முதல்வர் வாசுதேவன் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக கவிஞர், திரைப்படப் பாடலாசிரியர் பாவலர் அறிவுமதி கலந்து கொண்டு 'நட்புக்காலம்' எனும் தலைப்பில் தாய் தந்தையரே சிறந்த நண்பர்கள் என்றும் கண்ணியம் காத்தலே நட்பு அதில் ஆண், பெண் என்ற பேதமில்லை என்று பேசிய தோடு சூழ்நிலையை கவிதை யாக்கும் உத்தியை அவரது கவிதைகள் வாயிலாக எடுத்துரைத்தார். முன்னதாக இந்நிகழ்வி ற்கு தமிழ்த்துறைத் தலைவர் தினகரன் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் உமாதேவி நன்றியுரை வழங்கினார்.

இவ்விழாவி ற்கான ஏற்பாடுகளைத் தமிழ்த்துறை பேராசிரிய ர்கள் மற்றும் மன்றப் பொறு ப்பாளர்களும் செய்திருந்தனர்.

கிருஷ்ணா ஜெயந்தி விழா

## ஈரோடு இஸ்கான் சார்பில் ஆகஸ்ட் 10 ம் தேதி ஓவியப்போட்டி

மாணவ, மாணவியர் கலந்து கொள்ள அழைப்பு

ஈரோடு, ஆக.8—

ஈரோடு இஸ்கான் முன்னிட்டு பல்வேறு பள்ளிகளில் ஓவியம்

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## தமிழ்த்துறை

## தமிழ் மன்றத் தொடக்க விழா




ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பாக தமிழ் மன்றத் தொடக்க விழா கல்லூரியின் தாளாளர் உயர்திரு. பி.டி.தங்கவேல் அவர்களின் வழிகாட்டுதலில் 23.07.2025 புதன்கிழமை அன்று நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர். எச்.வாசுதேவன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக நாமக்கல் அரசு கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உடற்கூறியல் துறைத்தலைவரும் பேராசிரியருமான முனைவர் ஆ.குமரவேள் அவர்கள் கலந்து கொண்டு “மெல்லத் தமிழ் இனி வாழும்” என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கினார். முக்கிய நிகழ்வாக நொய்யல் தமிழ் மன்றத்தின் மாணவப் பொறுப்பாளர்கள் அறிமுகமும் சாரல் இதழ் வெளியீடும் நடைபெற்றது. இந்நிகழ்வில் சுமார் 400 மாணவர்கள் கலந்துகொண்டனர்.






# ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் நொய்யல் தமிழ்மன்ற நிகழ்வுகளின் தொடக்க விழா



**ஈரோடு ஜூலை 24**

ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பாக நொய்யல் தமிழ் மன்றத்தின் 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான நிகழ்வுகளின் தொடக்க விழா, கல்லூரியின் தாளாளர் பிடி. தங்கவேல் அவர்களின் வழிகாட்டுதலில் நேற்று நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் முனைவர். எச். வாசுதேவன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரியின் உடற்கூறியல் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் ஆ. குமரவேள் கலந்து கொண்டு, 'மெல்லத் தமிழ் இனி வாழும்' எனும் தலைப்பில் மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்,

அதுவே உங்கள் மனதை அழகாக்கும் என்றும் ஆணும் பெண்ணும் நிகரென உணர்வுகளைப் போற்றி மதித்துப் பழக வேண்டும், அதனை தமிழ் நமக்குக் கற்றுத்தரும், தமிழை வாசியுங்கள் நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது என்று பேசினார்

முன்னதாக நொய்யல் தமிழ் மன்றத்தின் மாணவப் பொறுப்பாளர்கள் அறிமுகமும் சாரல் இதழ் வெளியீடும் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப.தினகரன் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ம.உமாதேவி நன்றி கூறினார்

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைத் தமிழ்த்துறை பேராசிரியர்கள் மற்றும் மன்றப் பொறுப்பாளர்களும் செய்திருந்தனர்.

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி

# (தன்னாட்சி)

## ஈரோடு– 638107


## ஆங்கிலத் துறை


### ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் (இணையவழி)

### "ஆங்கில மொழி இலக்கியத்தில் புதுமையான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி எல்லைகள்: முழுமையான வகுப்பறை சிறக்க கல்வியாளர்களை மேம்படுத்துதல்"




ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் ஆங்கிலத்துறையின் சார்பாக, "ஆங்கில மொழி இலக்கியத்தில் புதுமையான கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி எல்லைகள் வழி முழுமையான வகுப்பறை சிறக்க கல்வியாளர்களை மேம்படுத்துதல்" என்ற தலைப்பில் ஏழுநாள் இணையவழி சர்வதேச ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்தை (FDP) 21.07.2025 முதல் 29.07.2025 வரை ஏற்பாடு செய்தது. மேம்பட்ட கற்பித்தல் முறைகள் மற்றும் ஆங்கில மொழி இலக்கியத்தில் சமீபத்திய முன்னேற்றங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் பங்கேற்பாளர்களின் கற்பித்தலையும் ஆராய்ச்சி திறன்களையும் மேம்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆசிரிய உறுப்பினர்கள் மற்றும் ஆராய்ச்சி அறிஞர்கள் உட்பட கிட்டத்தட்ட 480 பங்கேற்பாளர்கள் இந்த அமர்வுகளில் பங்கேற்று பயனடைந்தனர்.


Dr.K.Prabha (Presenting, annotating)
References
Anthony, E. M. 1963. Approach, method and technique. English Language Teaching 17: 63–67.
Asher, J. 1977. Learning another language through actions: The complete teacher's guide book. Sky Oaks Productions.
Bloomfield, L. 1933. Language. Holt.
Danesi, M. 2003. Second language teaching: A View from the right side of the brain. Kluwer Academic Publishers.
Mahmoodzadeh, M. 2012. The study of principles and techniques of bimodality theory from ELT teachers' perspective: The case of Iranian teachers. The Iranian EFL Journal, 8(1), 183 – 207.
Richards, J. C., and Rodgers, T. S. 2001. Approaches and methods in language teaching. Cambridge University Press.
Harpreet kaur
16
Priyadharshini Prabu can now join this meeting
Vikaash Prakash
S. Priyanandhini
208 others
KASC English


Dharani Rathnasamy (Presenting, annotating)
Elements of a "good adaptation
Three elements drive the readers'/spectators' positive evaluations-
1:Fidelity to the story
2:Creative additions (music, actor , places)
3:Temporal media distance between reading the book and watching the movie
JANE EYRE
SENSE and SENSIBILITY
Jane Austen
EMMA
Dharani Rathnasamy

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## வணிகவியல் துறை

### ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம்
### (இணையவழி)

**"வணிகக் கல்வியில் புதுமையான கற்பித்தல் முறைகள் மற்றும் டிஜிட்டல் ஒருங்கிணைப்பு: எதிர்காலத் தேவைக்கேற்ற பட்டதாரிகளை உருவாக்குதல்"**

**(Online Faculty Development Programme : "Innovative Pedagogies and Digital Integration In Commerce Education: Preparing Future-Ready Graduates)**




கொங்குகலைமற்றும்அறிவியல்கல்லூரி (தன்னாட்சி)-யின் வணிகவியல் துறை, 21.07.2025 முதல் 29.07.2025 வரை ஏழு நாள் இணையவழி ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டத்தை (FDP) வெற்றிகரமாக நடத்தியது. வணிகவியல் கல்வியில் கற்பித்தல்-கற்றல் செயல்முறையை மேம்படுத்துவதற்காக, ஆசிரிய உறுப்பினர்களுக்கு நவீன கற்பித்தல் முறைகள், டிஜிட்டல் கருவிகள் மற்றும் நடைமுறை உத்திகளைக் கொண்டு அவர்களைத் தயார்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

21.07.2025 அன்று, பெங்களூரில் உள்ள டாக்டர் அம்பேத்கர் தொழில் நுட்பநிறுவனத்தின் எம்.பி.ஏ துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் எஸ்.பாஸ்கரன் அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, வணிகவியல் கல்வியில் விமர்சன சிந்தனை மற்றும் நிலைத் தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இரண்டாம் நாளான 22.07.2025 அன்று, எத்தியோப்பியாவில் உள்ள வோலோ பல்கலைக் கழகத்தின் வணிகம் மற்றும் பொருளாதாரம் கல்லூரியைச் சேர்ந்த முனைவர் எம்.கார்த்திகேயன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, நவீன கற்பித்தல் கண்டு பிடிப்புகள் குறித்த நுண்ணறிவுகளை வழங்கினார். மேலும், ஜென்-இசட் மாணவர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய ஊடாடும் கற்பித்தல், விளையாட்டு மயமாக்கல் மற்றும் கற்பவர் மைய அணுகு முறைகளின் தேவையை அவர் வலியுறுத்தினார்.

23.07.2025 அன்று, திருச்செங்கோட்டில் உள்ள கே.எஸ்.ஆர் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் வணிகவியல் துறைத் தலைவர் திரு.ஓ.ரூல்கிகிருஷ்ணன் அவர்கள், இன்றைய பொருளாதாரத்தில் டிஜிட்டல் சந்தைப்படுத்தலையும் மற்றும் மின் வணிகத்தின் வளர்ந்து வரும் முக்கியத்துவத்தினையும் விவாதித்தார்.


24.07.2025 அன்று, விழுப்புரம், திருவண்ணாமலையில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் துறையைச் சேர்ந்த முனைவர் எஸ்.இந்திரா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, டிஜிட்டல் கருவிகள் எவ்வாறு வணிகவியலில் உள்ள கோட்பாட்டுக் கருத்துக்களுக்கு நிஜ உலகத் தொடர்பைக் கொண்டு வர முடியும் என்பதையும், மாணவர்களின் ஈடுபாடு மற்றும் வேலை வாய்ப்புத் திறன்களை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பதையும் எடுத்துரைத்தார்.

25.07.2025 அன்று, பெங்களூரில் உள்ள கிறிஸ்டு ஜெயந்தி கல்லூரி (நிகர்நிலைப் பல்கலைக் கழகம்)-யின் தொழில் முறை கணக்கியல் மற்றும் நிதித் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ்.சௌமியா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, வணிகவியல் பாடங்களில் கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயல்முறைக் கற்றல் நுட்பங்கள், வழக்கு அடிப்படையிலான கற்பித்தல் மாதிரிகளையும் மதிப்பீட்டு உத்திகளையும் பகிர்ந்து கொண்டார்.

திருச்சிராப்பள்ளி, நேஷனல் கல்லூரி (தன்னாட்சி), வணிகவியல் துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் எம்.வாசன், 28.07.2025 அன்று சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, மாணவர்களிடையே விமர்சன சிந்தனையை வளர்ப்பதற்காக, அன்றாட கற்பித்தலில் திறன் அடிப்படையிலான பயிற்சி, சிக்கல் தீர்க்கும் செயல்பாடுகள் மற்றும் பகுப்பாய்வுப் பணிகளை இணைப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

29.07.2025 அன்று, ராசிபுரம், முத்தையம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் வணிகவியல் துறைப் பேராசிரியரும் தலைவருமான முனைவர் கே.செல்வராஜ், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, எதிர்காலப் பணியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வணிகவியல் பாடங்களில் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பிற்கும் ஏற்பப பாடத் திட்ட வடிவமைப்பு எவ்வாறு பரிணமிக்க வேண்டும் என்பது குறித்த ஒரு விரிவான கண்ணோட்டத்தை வழங்கினார்.

இந்த ஆசிரிய மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், பங்கேற்பாளர்கள் வளர்ந்து வரும் கற்பித்தல் முறைகள் மற்றும் டிஜிட்டல் கருவிகள் குறித்த ஆழமான நுண்ணறிவைப் பெற்றனர். பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்தஆசிரிய உறுப்பினர்கள் இந்தத் திட்டத்தில் பங்கேற்றனர்.



# கொங்குகலைஅறிவியல்கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## முதலாமாண்டுமாணவர்களுக்கான பட்டவகுப்புகள்தொடக்கவிழா






ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் 2025 – 2026ஆம் கல்வியாண்டில் புதிதாகச் சேர்ந்துள்ள முதலாமாண்டு மாணவர்களுக்கான பட்ட வகுப்புகள் தொடக்க விழா பெருந்துறை ‘தி கொங்கு வேளாளர் இன்ஸ்டிடி ட் ஆப் டெக்னாலஜி’ டிரஸ்ட்டின் தலைவர் டாக்டர். R.குமாரசுவாமி அவர்களின் தலைமையில் செயலாளர் திரு.P.சத்தியமூர்த்தி, பொருளாளர் K.V.ரவிசங்கர், கல்லூரியின் தாளாளர் P.D.தங்கவேல் ஆகியோர்களின் வழிகாட்டுதலின் படி 27.06.2025 வெள்ளிக்கிழமையன்று கல்லூரிக் கலையரங்கில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கல்லூரியின் தாளாளர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கோவை ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் சுவாமி யோகாமிருதானந்தர் அவர்கள் அனைத்து மாணவர்களுக்கும் தங்களின் வருங்கால வாழ்க்கை நல்ல வாழ்க்கையாக அமைய அருளாசி வழங்கி, உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக கோவையைச் சார்ந்த படைப்பாளர், தன்னம்பிக்கைப் பேச்சாளர் கலைமாமணி மரபின் மைந்தன் முத்தையா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மாணவர்கள் ஏட்டுக் கல்வியைத் தாண்டி நடைமுறை வாழ்வியலையும் கற்றுத் தேர்ந்து சிகரம் தொட வேண்டும் என்றும் ஒவ்வொருவருக்குள்ளும் தனித்தனித் திறமைகள் உள்ளன அதனால் யாரையும் யாரோடும் ஒப்பிடாதீர்கள்; வாழ்க்கை தனித்துவமானது என்றும் சுடராய்ப் பிரகாசித்துக் காட்டுத்தீயாய்ப் பரவுங்கள், சிலந்தி வளையில் சிக்காத சிறுத்தைகளாக இருங்கள் என்றும் தன்னம்பிக்கை சார்ந்தபல்வேறு எழுச்சியூட்டும் சிந்தனைகளோடு எடுத்துரைத்து மாணவரையும் பெற்றோரையும் ஈர்க்கும் வகையில் சிறப்பாகப் பேசினார்.

முன்னதாக கொங்கு வேளாளர் தொழில்நுட்பக் கல்லூரி அறக்கட்டளையின் பாரம்பரிய பாதுகாவலராக P.C.பழனிசாமி வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து கல்லூரி இறுதித் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. 100% தேர்ச்சி வழங்கிய பேராசிரியர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது.

இவ்விழாவில் ஈரோடு, கொங்கு பொறியில் கல்லூரியின் தாளாளர் திரு. A.K.இளங்கோ, கொங்கு பாலிடெக்னிக் மற்றும் கொங்கு நேச்சுரோபதி அண்ட் ஹோமியோபதி மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை தாளாளர் திரு.A.வெங்கடாசலம், தி கொங்கு வேளாளர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி டிரஸ்ட்டின் துணைத் தலைவர் திரு.E.R.K.கிருஷ்ணன், இணைச் செயலாளர் திரு. K.பழனிசாமி ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் H.வாசுதேவன் அவர்கள் கல்லூரியில் மாணவர்கள் விதிமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று பேசினார். சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கல்லூரிப் பேராசிரியர்கள் செய்திருந்தனர். விழாவின் ஒருங்கிணைப்பாளரும் வணிகவியல் துறைத் தலைவருமான முனைவர் K.M.குமரகுரு அவர்கள் நன்றியுரையாற்ற விழா இனிதே நிறைவுற்றது.

- தினத்தந்தி, உள்நாட்டுச் செய்திகளை உடனுக்குடன் தருகிறது -

# தினத் தந்தி
DAILY THANTHI

ஈரோடு (28-6-2025)
சனிக்கிழமை
ERODE

மலர் 83
இதழ் 238
VOL 83
ISSUE 238

வெல்க தமிழ்

விசுவாவசு ஆனி மீ 14 உ
ஹிஜிரி 1447 முகரம் 2




### கொங்கு கலை அறிவியல் கல்லூரியில்

## முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழா

ஈரோடு, ஜூன்.28-
ஈரோடு நஞ்சனாபுரத்தில் உள்ள கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு வகுப்புகள் தொடக்க விழா நடைபெற்றது. இதற்கு பெருந்துறை கொங்கு வேளாளர் தொழில்நுட்ப கல்லூரி அறக்கட்டளை தலைவர் ஆர். குமாராசுவாமி தலைமை தாங்கினார். செயலாளர் பி.சத்தியமூர்த்தி, பொருளாளர் கே.வி.ரவிசங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி தாளாளர் பி.டி.தங்கவேல் வரவேற்றார். கோவை ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் சுவாமி யோகாமிருதானந்தர், கோவையை சேர்ந்த படைப்பாளர், தன்னம்பிக்கை பேச்சாளர் மரபின் மைந்தன் முத்தையா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு பேசினர். இதையொட்டி கொங்கு வேளாளர் தொழில்நுட்ப கல்லூரி அறக்கட்டளையின் பாரம்பரிய பாதுகாவலர் பி.சி.பழனிசாமி வாழ்த்தி பேசினார். மேலும் கல்லூரி இறுதித்தேர்வில் முதலிடம் பிடித்த மாணவ- மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

இதில் கொங்கு என்ஜினீயரிங் கல்லூரி தாளாளர் ஏ.கே.இளங்கோ, கொங்கு பாலிடெக்னிக் மற்றும் நேச்சுரோபதி அண்டு ஹோமியோபதி மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை தாளாளர் ஏ.வெங்கடாசலம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் முதலாமாண்டு மாணவர்களுக்கான பட்டவகுப்புகள் தொடக்க விழா




ஈரோடு ஜூன் -28
ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் 2025 - 2026 ஆம் கல்வியாண்டில் புதிதாகச் சேர்ந்துள்ள முதலாமாண்டு மாணவர்களுக்கான பட்டவகுப்புகள் தொடக்க விழா பெருந்துறை தி கொங்கு வேளாளர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி டிரஸ்ட்டின் தலைவர் ஆர்.குமாரசுவாமி தலைமையில் செயலாளர் சத்தியமூர்த்தி, பொருளாளர் ரவிசங்கர், கல்லூரியின் தாளாளர் தங்கவேல் முன்னிலையில் நடைபெற்றது. விழாவில், கல்லூரியின் தாளாளர் வரவேற்புரை ஆற்றினார்.

கோவை ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயத்தின் சுவாமியோகாமிருதானந்தர் அனைத்து மாணவர்களுக்கும் தங்களின் வருங்கால வாழ்க்கை நல்ல வாழ்க்கையாக அமைய அருளாசி வழங்கி, உரையாற்றினார்.

சிறப்பு விருந்தினராக கோவையைச் சார்ந்த படைப்பாளர், தன்னம்பிக்கைப்பேச்சாளர் கலைமாமணி மரபின் மைந்தன் முத்தையா கலந்துகொண்டு உரை வழங்கினார். மாணவர்கள் ஏட்டுக்கல்வியைத் தாண்டி நடைமுறை வாழ்வியலையும் கற்றுத் தேர்ந்து சிகரம் தொட வேண்டும் என்றும் ஒவ்வொருவருக்குள்ளும் தனித்தனி திறமைகள் உள்ளன அதனால் யாரையும் யாரோடும் ஒப்பிடாதீர்கள்;

வாழ்க்கை தனித்துவமானது என்றும் சுடராய் பிரகாசித்து காட்டுத்தீயாய் பரவுங்கள், சிலந்தி வலையில் சிக்காத சிறுத்தைகளாக இருங்கள் என்றும் தன்னம்பிக்கை சார்ந்த பல்வேறு எழுச்சியூட்டும் சிந்தனைகளோடு எடுத்துரைத்து மாணவரையும் பெற்றோரையும் ஈர்க்கும் வகையில் சிறப்பாகப் பேசினார்.

முன்னதாக கொங்கு வேளாளர் தொழில்நுட்பக் கல்லூரி அறக்கட்டளையின் பாரம்பரிய பாதுகாவலராக பழனிசாமி வாழ்த்துரை வழங்கினார். கல்லூரி இறுதித் தேர்வில் முதலிடம்பெற்றமாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. 100% தேர்ச்சி வழங்கிய பேராசிரியர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது.

இவ்விழாவில் ஈரோடு, கொங்கு பொறியியல் கல்லூரியின் தாளாளர் இளங்கோ, கொங்கு பாலிடெக்னிக் மற்றும் கொங்கு நேச்சுரோபதி அண்ட் ஹோமியோபதி மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை தாளாளர் வெங்கடாசலம், தி கொங்கு வேளாளர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி டிரஸ்ட்டின் உபதலைவர் கிருஷ்ணன், இணைச்செயலாளர் பழனிசாமி ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் வாசுதேவன் கல்லூரியில் மாணவர்கள் விதிமுறைகளைப் பின்பற்றி எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்று பேசினார். சிறப்பாக நடைபெற்ற இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கல்லூரிப்பேராசிரியர்கள் செய்திருந்தனர். விழாவின் ஒருங்கிணைப்பாளர் வணிகவியல் துறைத்தலைவர் முனைவர் குமரகுரு நன்றியுரையாற்னார்.

மாலை தீபம்

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## உள்தர உறுதிக் கட்டமைப்பு(IQAC)

## "வழிகாட்டுதல் பயிற்சி வகுப்பு (தீக்ஷரம்ப்)

## (DEEKSHRAMBH-Students Induction Programme)




கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி), உள்தர உறுதிக் கட்டமைப்பின் (IQAC) சார்பாக 27.06 2025 முதல் 05 07.2025 வரை அனைத்து முதலாம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்கான வழிகாட்டுதல் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. இரண்டாம் நாள் (30.06.2025) அன்று நடைபெற்ற நிகழ்வில் சிறப்பு விருந்தினராக படைப்பாளர், எழுத்தாளர், சுயமுன்னேற்றப் பேச்சாளர் ஈரோடு கதிர் அவர்கள் கலந்து கொண்டு “வாழ்க்கையின் நோக்கங்களைப் பயனுள்ளதாக மாற்றுவது” என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். மாணவ மாணவிகள் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் ஒரு உயர்ந்த எண்ணங்களையும், கனவுகளையும் கொண்டிருக்க வேண்டும் எனவும், நம் வாழ்க்கைக்கு உதவிய பெற்றோர்களுக்கும், இந்தச் சமுதாயத்திற்கும் எப்பொழுதும் நன்றி கூற கடமைப்பட்டிருக்க வேண்டும் எனவும் கூறினார் இன்றைய தொழில்நுட்ப காலகட்டத்தில் மாணவ மாணவிகள் தொழில்நுட்ப வசதியைச் சரியாகவும், முறையாகவும் பயன்படுத்தி அனைவரும் சிறப்பாகக் கல்லூரி முடித்து வாழ்க்கையை வெற்றியோடு தொடங்க வேண்டும் எனவும் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் உயிர் வேதியியல் துறையின் தலைவர் முனைவர் ஏ.கே. வித்யா அவர்கள் அனைவரையும் வரவேற்றார் கல்லூரியின் முதல்வர் முனைவர் எச்.வாசுதேவன் அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். கணிதத்துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் எஸ்.சுரேஷ் அவர்கள் நன்றியுரையாற்றினார் மதியம் நடைபெற்ற நிகழ்வில்

கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் எச்.வாசுதேவன் அவர்கள் கல்லூரியின் சிறப்புகள், நெறிமுறைகள், பருவத் தேர்வு முறைகள் போன்றவற்றையும், மாணவ மாணவிகள் கல்லூரியில் பின்பற்ற வேண்டியவைகள் போன்றவற்றை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வினைக் கல்லூரியின் தாளாளர் பி.டி தங்கவேல் அவர்கள் கலந்து கொண்டு புதிய மாணவர்களைப் பாராட்டினார். இத்திகழ்விற்கான ஏற்பாடுகளைக் கல்லூரியின் உள்தர உறுதிக்கட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் கே.கே.ஏ. அழகுஅப்பன் அவர்களும், இந்தி மற்றும் பிற மொழிகள் துறைத் தலைவர் முனைவர் வி.அன்புமணி அவர்களும், பேராசிரியர்களும் செய்திருந்தனர்.








கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவ மாணவிகளுக்கு பயிற்சி வகுப்பு

thinaboomi.com

# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு– 638107

## உள்தர உறுதிக் கட்டமைப்பு (IQAC)

## ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம்

## "திறமையான வழிகாட்டுதல்”

**(Faculty Development Programme on “Effective Mentoring”)**




கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி) உள் தர உறுதிக் கட்டமைப்பு(IQAC) ஏற்பாடு செய்த “திறமையான வழிகாட்டுதல்” குறித்த ஆசிரியர் மேம்பாட்டுத் திட்டம் 25.06.2025 அன்று நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக ஈரோடு கதிர், மனிதவளப் பயிற்சியாளர் மற்றும் எழுத்தாளர், ‘சிக்ஸ் பிளஸ் ஒன்’ பயிற்சி அகாடமியின் நிறுவனர், ஈரோடு அவர்கள் கலந்து கொண்டார். மாணவர்களின் கல்வி, தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியைத் திறம்பட ஆதரிப்பதற்காக ஆசிரிய உறுப்பினர்களின் வழிகாட்டுதல் திறன்களை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். அனைத்துத் துறைகளிலிருந்தும் பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

சிறப்பு விருந்தினர், ஆசிரிய வழிகாட்டிகளின் பங்கு, வழிகாட்டுதல் மாதிரிகள், தொடர்பு மற்றும் பின்னூட்ட உத்திகள், நெறிமுறைப் பழக்கவழக்கங்கள் மற்றும் மாணவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட சவால்களை எதிர்கொள்வதற்கான அணுகுமுறைகள் ஆகியவற்றை எடுத்துரைத்தார். இந்த அமர்வு மிகவும் பயனுள்ளதாக இருந்ததுடன், மாணவர்களின் தேவைகளுக்கு ஏற்ப ஒரு திறமையான வழிகாட்டுதல் திட்டத்தை வடிவமைத்து செயல்படுத்த உதவியது.




SET DEPARTMENT
WISE GOALS



# கொங்கு கலை அறிவியல் கல்லூரி
# (தன்னாட்சி)
# ஈரோடு – 638107

## உள்தர உறுதிக் கட்டமைப்பு(IQAC)

### திறன் மேம்பாட்டுத் திட்டம்
### "ஆசைப்படுங்கள் அடைந்துவிடுங்கள்"

**(Capacity Building Programme (CBP) on "Aspire to Inspire")**




கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி) உள்தர உறுதிக் கட்டமைப்பு(IQAC) 18.06.2025 முதல் 20.06.2025 வரை அனைத்து இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் "ஆசைப்படுங்கள் அடைந்துவிடுங்கள்" (Aspire to Inspire) என்ற தலைப்பில் திறன் மேம்பாட்டுத் திட்டத்தை (CBP) ஏற்பாடு செய்தது.

ஈரோட்டின் 'சிக்ஸ் பிளஸ் ஒன்' பயிற்சி அகாடமியின் நிறுவனர், மனிதவளப் பயிற்சியாளர் மற்றும் எழுத்தாளர் திரு.கதிர் நிகழ்ச்சியில் உரையாற்றி, ஒருவரின் உள்ளார்ந்த திறமைகளை அங்கீகரிப்பது, திறன்களை வளர்ப்பது மற்றும் தெளிவான, அடையக்கூடிய இலக்குகளை நிர்ணயிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். தன்னிலை ஆய்வு (Introspection) மற்றும் உறுதியான முயற்சி(Determination) ஆகியவை தனிநபர் வளர்ச்சிக்கும் எதிர்கால வெற்றிக்கும் எவ்வாறு முக்கியபங்கு வகிக்கின்றன என்பதையும் அவர் எடுத்துரைத்தார். மாணவர்கள் தங்களின் பலம் மற்றும் பலவீனங்களை உணர்ந்து, தங்கள் இலக்குகளை நோக்கி தெளிவான முன்னேற்றத்தை முயற்சி எடுக்க வேண்டும் என அவர் ஊக்கமளித்தார்.

இந்த அமர்வுகள் மிகுந்த ஈர்ப்புடனும் பயனுள்ளவையாகவும் அமைந்தன. கலந்துரையாடல்கள் மற்றும் செயல்பாடுகளில் மாணவர்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பங்கேற்று, நிகழ்ச்சியின் மையக்கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவும், தங்களைத் தாங்களே சுய ஆய்வு செய்யவும் ஊக்கமளித்தன. இந்த நிகழ்ச்சி மாணவர்களிடையே தன்னம்பிக்கை, சிந்தனைத் தெளிவு மற்றும் புதுப்பித்த நோக்குணர்வை உருவாக்கியது.

மாணவர்களின் சிந்தனைத் திறனையும் தரத்தையும் மேம்படுத்தவும், அவர்கள் வெற்றிகரமான வாழ்க்கையை வாழ உதவவும் இதுபோன்ற ஒரு வளமான திட்டத்தை ஏற்பாடு செய்த ஏற்பாட்டுக் குழுவின் முயற்சிகளைத் தாளாளர் திரு.பி.டி.தங்கவேல் அவர்களும் முதல்வர் முனைவர் எச்.வாசுதேவன் அவர்களும் பாராட்டினர்.

IQAC ஒருங்கிணைப்பாளர் முனைவர் கே.கே.ஏ.அழகப்பன் அவர்களும் இந்தி மற்றும் பிற மொழிகள் துறைத்தலைவர் முனைவர் வி.அன்புமணி அவர்களும் குழு உறுப்பினர்களும் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். சுமார் 1000 மாணவர்கள் CBP - யில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



